**செய்தி வெளியீடு எண்: 322** **நாள்: 11.05.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

செயலர், தமிழ்நாடு மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம், சென்னை அவர்கள் இச்சங்கத்தில் காலியாக உள்ள முற்றிலும் தற்காலிக கீழ்கண்ட பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்தில் முற்றிலுமாக தற்காலிக தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார். இவர்கள் அரசுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

| பதவி | பணியிடம் | காலி பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| திட்ட மேலாளர் | மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் | 1 |
| கணக்கு உதவியாளர் | மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் | 1 |

இப்பணியிடங்களுக்கான கல்வி தகுதி, அனுபவம், வயது வரம்பு, மற்றும் விண்ணப்பிப்பதற்கான உரிய விண்ணப்ப படிவம் ஆகியவற்றை <http://www.tn.gov.in/department/30> அல்லது <http://www.tn.gov.in/job_opportunity> ஆகிய அதிகாரப்பூர்வ இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் 23.05.2018 மாலை 05:30 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

.

செயலாளர்,
மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்,
சமூக பாதுகாப்புத் துறை,
எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை–10
தொலைபேசி : 044–26421358

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**